**cross**

**O.S.No. 149/2016**

**Date:05.08.2025**

**வா.சா 2 குருநாதன்**

**1,2 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்மன் வாங்கி சாட்சி சொல்ல வரவில்லை. வாதி அழைத்ததன் பெயரில் வந்தேன். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஸ்ரீவில்லிபுத்துரில் உள்ள டி. கணபதி அவரிடமும் அதன் பின்பு சி. சற்க்குணம் அவரிடமும் வழக்கறிஞரின் குமாஸ்தாவாக பணிபுரிந்து வந்தேன். பொதுவாக வழக்கு பிராதினை நானே தயார் செய்து கொள்வேன் என்றால் பணம் வழக்கு சம்பந்தப்பட் வழக்கை தயார் செய்து கொள்வேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. சங்கரன் பிள்ளை அக்கா மகளுக்கும் எனக்கும் 1973 ல் திருமணம் ஆனது. திருமணம் முடிந்த காலம்முதல் தற்போது வரை ஸ்ரீ வில்லிபுத்துாரில் குடியிருந்து வருகிறேன். மாரியம்மாள் திருமணம் முடிந்த காலம் முதல் கரிவலம் வந்தநல்லூரில் குடியிருந்து தற்போது சங்கரன்கோவிலில் வசித்து வருகிறார். வாதியின் கணவர் அரசு ஊழியராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். வாதிக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் என்ன சீர் வரிசை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் சங்கரன்பிள்ளை தான் சீர் வரிசை கொடுத்து திருமணம் செய்து வைத்தார். சங்கரன் பிள்ளை இறந்த பின்பு வாதியின் மகளுக்கு 1 ,2 பிரதிவாதிகள் சீர்வரிசை செய்தார்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் யார் வழக்கு நடத்துகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 1, 2, 5 பிரதிவாதிகள் வழக்கை நடத்துகிறார்கள். 5ம் பிரதிவாதியை யார் பராமரித்து வருகிறார் எனக் கேட்டால் சங்கரன்பிள்ளை

இறந்த பின்பு 1ம் பிரதிவாதி கவனித்து வருகிறார். சங்கரன்பிள்ளை நோய்வாய்பட்டு இறந்தார் என்றால் 4 மாதம் தான் நோய்வாய்பட்டு இறந்தார். சங்கரன்பிள்ளை சொத்தில் இருந்து தான் அவரை பராமரித்தார்கள். சங்கரன்பிள்ளையின் இறுதிச் சடங்கை குடும்பத்தினர் அனைவரும் செய்தார்கள். சங்கரன்பிள்ளை மனைவி லட்சுமி அம்மாள் நோய்வாய்பட்டு தான் இறந்தார். அவருக்கு இறுதிச் சடங்கை குடும்பத்தினர் அனைவரும் செய்தார்கள். வாதி எத்தனை வகை சொத்துக்களை பொறுத்து பரிகாரம் கேட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. வழக்கில் சொல்லியுள்ள சொத்தின் சா்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சொத்துக்கள் எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். கரிவலம் வந்தநல்லூரில் சங்கரன்பிள்ளை வாங்கிய 5 வீடுகள் உ ள்ளது. கரிவலத்தில் இருந்து இராஜபாளையம் செல்லும்சாலையில் பம்பு செட்டுடன் கூடிய விவசாய நிலம் உள்ளது. கரிவலத்தில் இருந்து சங்கரன்கோவில் செல்லும்சாலையில் பம்பு செட்டுடன் கூடிய புன்செய் நிலம் உள்ளது. சங்கரன்கோவிலில் உயிருடன் இருந்த காலகட்டத்தில் டிராக்டர் வாங்கி வைத்து விவசாயம் செய்து வந்தார். மேற்படி 5 வீடுகளை சங்கரன்பிள்ளை இறந்த பின்பு அவரின் பிள்ளைகள் தான் கவனித்து வருகிறார்கள். மேற்படி சொத்துக்களில் என்னென்ன பயிர் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது, கேள்விபட்டுள்ளேன். மேற்படி சங்கரன்பிள்ளை என்பவர் செல்வம் சோப்பு கம்பெனியில் ஏஜெண்டாகவும், என், வி. எஸ் பட்டணம் பொடி மற்றும் 5 பூமார்க் பீடி ஏஜெண்டு எடுத்து குடும்பமாக தொழில் பார்த்து வந்தார்கள். 1, 2 பிரதிவாதிகள் கிரயம் பெற்று அனுபவித்து வந்த சொத்துக்களில் வாதி பங்கு கேட்க முடியாது என்றால் சங்கரன்பிள்ளை அவரின் பிள்ளைகள் பெயரில் வாங்கி கொடுத்த

சொத்துக்கள் ஆகும். 1,2 பிரதிவாதிகள் தனிப்பட்ட சொத்து கிடையாது. சங்கரன்பிள்ளை குடும்ப பிரச்சினை சம்பந்தமாக என்னிடம் பஞ்சாயத்துக்கு வந்தது கிடையாது. மேற்படி சொத்துக்கள் பற்றி எந்த ஒரு விவரமும் எனக்கு தெரியாது என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அவர்களுக்கு சாதகமாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.